




சென்னை வடகிழக்கு மாவட்டம்,சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் மொண்டியம்மன் நகர் மார்க்கெட் அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய துணை பெரும் தலைவருமான மீ.வே. கர்ணாகரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. வழுதிகை நா.செல்வசேகரன்,ஏ.காசிம் முகமது,கே.எம். துரைவேல், ப. சீனிவாசன், கீ. வீரம்மாள், செ.அரசு, இரா.விஜயன், பா.சேகர்,பொன். கோதண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு முதல்வரின் 'வணிகவரி சமாதான திட்டம்!'

# வணிகர் சங்கங்கள் வரவேற்பு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக். 13 -

தமிழக சட்டப் பேரவையில் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிவித்த "வணிக வரி சமாதான திட்டம்" குறித்து தலையங்கத்தில் 'தினகரன்' நாளேடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வணிகர் சங்கங்களின் சார்பில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

நாடு அல்லது மாநிலம் தன்னிறைவுடன் சிறந்து விளங்க பொருளாதாரம் மிகவும் வலுவாக இருக்க வேண்டும். மக்களின் ஆதரவோடு மக்கள் நலன் காக்கும் முறையானது மன்னர்கள் காலத்தில் இருந்தே நடைமுறையில் இருந்து வருகிறது. பண்டை


தினகரன்
வணிகர்களுக்கு சலுகை

காலத்தில், 'ஆறாவது பங்கு அரசனுக்கு' என்று கூறுவார்கள். நாட்டை காக்கும் தலைவனுக்கு தன் வருமானத்தில் ஒரு பங்கை மக்கள் கட்டாயம் அளிக்க வேண்டும். இதன்மூலம் நாட்டின் பாதுகாப்பு உட்பட பல விஷயங்களுக்காக தேவைப்படும் பொருளாதாரத்தை, ஈடு கட்டுவதற்கான ஒரு வரி வசூல் முறையாக இது கருதப்பட்டது. சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வணிக முறையில் மக்கள் சிறந்து விளங்கினர் என்பதை, கீழடி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அகழாய்வுகளில் கிடைத்த பொருட்கள் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். உள்நாட்டு வணிகம், வெளிநாட்டு வணிக முறைகள் பல ஆயிரம் ஆண்டுகள் தொட்டே இருந்து வந்திருக்கிறது.

ஆகவே, அரசர் காலம் முதல் ஆன்ட்ராய்ட் காலம் வரை ஒரு நாடு அல்லது மாநிலம் பொருளாதார தன்னிறைவு பெற, சிக்கலின்றி ஆட்சி நடைபெற வரி விதிப்பு மிகவும் அவசியம். சாதாரணமாக, நாம் ஒரு பொருளை வாங்கும் போது அதற்கான வரியும் சேர்த்தே வசூலிக்கப்படுகிறது. ஜி.எஸ்.டி. அமலான பின் சில பொருட்களுக்கு அதிகபட்சம் 28 சதவீதம் வரை வரி விதிக்கப்படுகிறது. அதே நேரம் அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளும் தங்குதடையின்றி வந்து சேர வேண்டும். அப்போதுதான் அரசு இயந்திரத்தை சிறப்பான முறையில் செயல்படுத்த முடியும். அந்த வகையில் தமிழக முதல்வரின் வணிக வரி சமாதான திட்ட அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின், வணிக வரி சமாதான திட்டத்தை அறிமுகப்படுத்தி பேசியபோது, "தமிழக அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக சுமார் 2.11 லட்சம் கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. வணிகர்கள் செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.25 ஆயிரம் கோடி. நிலுவைத்தொகைகளை வசூலிப்பது தொடர்பாக வணிக வரி சமாதான திட்டத்தை அரசு வடிவமைத்துள்ளது. இதன்படி. ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும் ரூ.50 ஆயிரத்திற்கும் உட்பட்ட நிலுவை இனங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்" என அறிவித்தார்.

சிறு வணிகர்கள் நலன் கருதி வரி நிலுவையை தள்ளுபடி செய்வது தமிழக வரலாற்றில் இதுவே முதன்முறையாகும். இதன்மூலம் சுமார் 95 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு வணிகர்கள் பலன் அடைவார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், ரூ.50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வரி நிலுவை வைத்திருப்பவர்கள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக் கும் குறிப்பிட்ட அளவு சதவீத நிலுவை த்தொகையை செலுத்தி வழக்குகளில் இருந்து தங்களை விடு வித்துக் கொள்ளலாம். வட்டி சலுகையும் அறிவிக்கப்பட்டுள்ளது. முதல்வரின் இந்த அறிவிப்பை வணிகர் சங்கங்கள் வெகுவாக வரவேற்றுள்ளன. இந்த சமாதான திட்டமானது வரும் அக். 16ம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது. அடுத்தாண்டு பிப். 15ம் தேதி வரை இந்த திட்டம் நடைமுறையில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. வணிகர்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே அரசின் எதிர்பார்ப்பு.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் முதல்வரை பாராட்டியுள்ளது.





சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி சார்பில் நேற்று 12.10.2023 மதியம் 12 மணியளவில் ஓட்டேரி எம்.கே.டி. மஹாலில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு தலைமையேற்று சிறப்புரை ஆற்றினார். இதில் நாளை 14.10.2023 சென்னை ஒய்.எம்.சி.ஏ. திடலில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி தலைமையில் நடைபெறவிருக்கும் மகளிர் உரிமை மாநாட்டில் சென்னை கிழக்கு மாவட்டம் மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி சார்பில் பெருந்திரளாக பங்கேற்பது குறித்து ஆலோசனை வழங்கினார். இந்த கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாவட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், வலைதள பொறுப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பகுதி துணை செயலாளர்கள், வட்டக் கழக துணை செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொணடு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் ப. பொன்னுரங்கம்
### அக்டோபர் 13 (1989)



**பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்க கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்தவர்.**

**இராயபுரம் பகுதிக் கழகச் செயலாளராகவும், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டம், விலைவாசி உயர்வு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1986ஆம் ஆண்டு மத்திய அரசின் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்டப்பிரிவை தீயிட்டு எரித்ததால் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

# அண்ணாவின் அன்புத் தம்பி; அஞ்சாத ஆசைத் தம்பி!

அண்ணாவின் தம்பிகள்
ஆயிரம் ஆயிரம்
எண்ணிலா இளைஞர்கள்;
இலட்சிய ஈட்டிகள்!
விண்மீன்கள் நெருங்கிய
விரிவானில் விளங்குதல்போல்
கண்முன்னே விரிந்திடக்
கழகந்தான் வளர்ந்திடத்
திண்மையாய் எழுந்தோருள்
சிகரமாய்த் திகழ்ந்தவர்;
கண்ணாகக் கழகத்தைக்
கருதிய பாசத்தம்பி
நண்ணியே என்னுடன்
நடந்தவர் என் நல்லதம்பி!
அண்ணாவே பாராட்டி
அகமகிழ் அறிவுத்தம்பி;
அண்ணாவின் நெஞ்சிலே
அமர்ந்தவோர் ஆசைத்தம்பி!

வண்மையை நாடாமல்
வழுவியும் ஓடாமல்
உண்மையாய் இறுதிவரை
உரிமையோடு இருந்தவர்!
தொண்டராய்த் தோழராய்,
துணையெனத் தலைவராய்
மண்டிலம் எங்குமே
மாண்புற வளர்ந்தவர்
கண்டிலம் இவர்போலக்
கடமை,கண் ஆனவர்!

கருத்துள்ள நூலொன்று
"காந்தியார் சாந்தியடைய",
பொருத்தமாய் எழுதிடப்
புரட்சிநூல் என்றரசு
கருதியதால் ஆறுமாதக்
கடுங்காவல் விதித்ததுடன்
நெருக்கமாய் இருந்தமுடி
நீக்கியே மொட்டைபோட்டு
வருத்திடினும் கொள்கைத்தேர்
வலமாக எழுந்தவர்!

தனிநாடு கோரிக்கை
தழைத்திருந்த காலத்தில்
நனிஎழுச்சி மிகுந்திருந்த
அண்ணாவின் நாள்களிலே
தனியரசு நாளிதழ்
தயங்காமல் நடத்தியவர்!
முனைப்புடன் எழுதியவர்;
முப்போதும் விடுதலை
நினைப்போடு இயங்கியவர்;
நெருப்பாக முழங்கியவர்!
தனைத்தலைவர் எனக்கருதித்
தனிக்கட்சி தொடங்கியவர்
எனைத்தொன்றும்
செய்யத்தான்
இயலாதென்று அறிந்தனால்
தினையளவும்
தடுமாற்றம் தீண்டாமல்
திகழ்ந்தவர்;
கனவிலும் அண்ணாதான்



கழகமெனத் திளைத்தவர்!

வேலாகப் பாய்ந்தவர்;
வீணரைக் காய்ந்தவர்;
பாலினை ஒத்தவர்;
பட்டதை உரைத்தவர்
நூலினை எழுதியதால்
சிறையிலே நோற்றவர்;
ஆல்போன்ற கழகத்தின்
அகலாத விழுதவர்;
கோலேந்தி ஆள்வதற்குக்
கொள்கைவயல் உழுதவர்!
சாலவே மாந்தர்க்குத்
தன்மானம் பகுத்தறிவு
கோலமெனப் பெரியார்போல்
கொள்கையைப் பொழிந்தவர்!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

கலைஞரின் தோழரென்ற
காரணத்தால் மிசாவெனும்
கொலைகாரச் சட்டத்தின்
கொடுங்குகைப் பட்டவர்;
வலையுற்ற சிங்கத்தை
வணங்காத செம்மலை
சிலநாளா? ஓராண்டு
சிறையிலே இட்டனர்!
உலையாகக் கொதித்திடும்
உள்ளந்தான்; கழகத்தை
இலையென ஆக்குதற்கு
இழைத்தபல கொடுமைகளை
மலைபோல நின்றெதிர்த்த
மறவருள் ஒருவராய்த்
தலைநிமிர்ந்து நின்றவர்;
தன்மானக் குன்றவர்;
குலையாமல் திகழ்ந்தவர்;
கொள்கையில் முகிழ்த்தவர்!

குறையெதிர்த்துப் போராடிக்
குண்டுதடி கண்டவர்க்குச்
சிறைச்சாலை மலர்க்கூட்டச்
சித்திரச் சோலையன்றோ!

அஞ்சாத தம்பியாய்
அண்ணாவோ டிருந்தவர்;
நெஞ்சுரமாய் முதல்தேர்தல்
நின்றுவெற்றி பெற்றவர்!
எஞ்சிய தேர்தலிலும்
வெற்றியே எட்டியவர்;
விஞ்சியே நாடாளு
மன்றமும் வென்றவர்;
துஞ்சியது அந்தமானில்
துயரினும் துயரன்றோ!
வஞ்சகம் கூற்றுவன்
வலிந்தங்குப் பறித்தது,
கொஞ்சமும் ஏற்கத்தான்
கூடாத வினையன்றோ!
பிஞ்சாகிக் காயாகிப்
பெருங்கனி ஆகுமுன்னே
நஞ்சகம் ஆனதன்றோ!
நல்லுயிர் போனதன்றோ!
நெஞ்சகம் அவர்தொண்டு
நினையாமல் போகுமோ?
எஞ்சிடும் காலமெல்லாம்
இல்லாமல் ஆகுமோ?
மஞ்சுசூழ் வையத்தில்
மணந்தென்றும் நீளுமே!

வெண்தாடிப் பெரியார்போல்
வெளிப்படையாய்ப்
பேசியதால்
வண்ணமாய் அழைத்தனர்
வாலிபப் பெரியார்என்று!
எண்ணத்தில் பகுத்தறிவு
இயங்கலில் தன்மானம்
மண்விட்டுப் போகுமட்டும்
வாழ்விலே கொண்டவர்!
விண்தொடும் புகழோடு
விளங்குகின்ற நூறாவது
எண்தொடும் பிறந்தநாள்
இலட்சியம் சிறந்தநாள்
வண்டூதும் மலர்களை
வாரிவாரித் தூவியே
கொண்டாடிப் போற்றுவோம்!
கொள்கைமகன் ஏற்றுவோம்!

பழமையை மறவாத
பண்புயர் தளபதியார்!
உழைத்தோரின் தொண்டினை
உயர்த்துகிற தலைவரவர்!
இழையான தொண்டரை
ஏற்றுகிற முதல்வரவர்!
இழப்பினுக்கு ஆளாகி
இடர்ப்பட்டும்
துயர்ப்பட்டும்
உழன்றசிறை வயப்பட்டும்
உருக்குலையா உறுதியுடன்
எழுந்தவர் ஆசைத்தம்பி
என்றவரின் நூற்றாண்டு
விழைவுடன் கொண்டாடும்
விழாவிங்கு வாழ்கவே!
மழையாகப் பெருகியுயர்
மாப்புகழ் வளர்கவே!

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், கோவை, நாமக்கல், திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், நாளை (14.10.2023 - சனிக்கிழமை), காலை 11.00 மணியளவில் சேலம், மாமங்கம், மகேந்திரா கார் ஷோரூம் எதிரில் உள்ள "ஓட்டல் ராடிசனில்" நடைபெறும்.

இக்கூட்டத்தில் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் செய்திடுவதோடு, அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் - 12.10.2023

**என்.ஆர்.இளங்கோ எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை

## சென்னை தெற்கு மாவட்ட

# மகளிரணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைப்பாளர் கனிமொழி தனசேகரன் அறிவிப்பு!

*சென்னை, அக்.13*

*சென்னை தெற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கனிமொழி தனசேகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சென்னை தெற்கு மாவட்ட மகளிரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (13-10-2023, வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் மாவட்ட மகளிரணி அலுவலகம், கே.கே. நகர், அண்ணா மெயின் ரோடு, அசோகா காலனியில் நடைபெறுகிறது.*

*அக்டோபர் 14-ஆம் தேதி மாலை 4.30 மணியளவில் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில். கழகத் துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலையில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி மற்றும் இந்தியா கூட்டணி கட்சியின் பெண் தலைவர்கள் கலந்துகொள்ளும் மகளிர் உரிமை மாநாடு குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.*

*இதில் சென்னை தெற்கு மாவட்ட மகளிர் அணி, பகுதி கழக மகளிர் அணி, ஒன்றிய மகளிர் அணி நிர்வாகிகள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் கனிமொழி தனசேகரன் தெரிவித்துள்ளார்.*



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ஏழை எளிய மாணவர்களின் கல்வி கனவை நனவாக்கும் வகையில் அரசு பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு காலை உணவு திட்டத்தினை கொண்டு வந்தார். இந்நிலையில் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பட்டாபிராம்,சத்திரம் உள்ளிட்ட பகுதியில் செயல்பட்டு வரும் அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டம் முறையாக செயல்படுத்த படுகிறதா என முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.அப்போது அங்கு காலை உணவு சமைக்கும் சமையல் கூடம் மற்றும் சமையல் செய்யும் பாத்திரங்கள் சுத்தமாக உள்ளதா எனவும் ஆய்வு மேற்கொண்டார்.மேலும் மாணவ மாணவிகளுக்கு வழங்கும் உணவின் தரம் குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார் இந்நிகழ்வில் பகுதி செயலாளர் பொன்.விஜயன், சண்பிரகாஷ், பா.நரேஷ்குமார், ஜி.விமல்வர்ஷன், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், கவுன்சிலர் ஷீலாதாஸ், நேமிலி கே. சுரேஷ்குமார், வி.சிங்காரம், து.சௌந்தர், எஸ்.ஒய்.தாஸ், ராஜாலிங்கம், அதிகேசவன், வழக்கறிஞர் பெ.வினோத், பூவை ஜெ.சுதாகர், உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.